Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

1. கிருட்டினன் தூது என்ற பாடப்பரப்பில் இடம்பெறும் பின்வரும் செய்யுட்பகுதிகளைப் படித்து அதன் கீழ் வினவப்படுகின்ற வினாக்களுக்கு விடை தருக.

முந்து ஊர் வெம் பணிக் கொடியோன் மூதூரில்
நுடந்து உழவர் முன்றில்தோறும்
நந்து ஊரும் புனல் நாட்டின் திறம் வேண்டு
நாடு ஒன்றும் நல்கான் ஆகில்
ஐந்து ஊர் வேண்டு அவை இல் எனில் ஐந்து இலம் வேண்டு
ஆவை மறுத்தால் அடு போர் வேண்டு
சிந்தூரத் திலக நுதல் சிந்துரத்தின்
மருப்பு ஒசித்த செங்கண் மாலே.

i) துரியோதனனிடம் எவற்றை தூதாக வேண்டும்படி குறிப்பிடப்படுகின்றது?

ii) சிந்தூரம், சிந்துரம் எனப்படுபவற்றைத் தெளிவுபடுத்துக.

2) மூத்தோன் மற்று இவை உரைப்ப இளையோன்
வெஞ்சினம் மனத்திலே மூளமூள
நாத் தோம் இல் உரைபதறக் கதுமென உற்று
எழுந்து இறைஞ்சி ஞாலம் எல்லாம்
பூத்தோனே பூந்தவிசில் பூவை புணர்
மணி மார் பா புன்மை யாவும்
தீர் த்தோனே ஊனம் இலான் மானம் இலாது
உரைப்பதற்கு என் செய்வது என்றான்.

i) வீமனின் சினம் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?

ii) கிருட்டினன் சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது?